**(ஆனி 32) 2026 ஜீலை 16 ஆம் தேதி வியாழக்கிழமை காலை 11.00 மணிக்கு**
**திருவாரூர் நகர் மன்ற சாதாரணக் கூட்டம் நடைபெறும் அச்சமயம்**
**கீழ்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்**
**முன்னிலை.திருமதி.செ.புவனப்பிரியா செந்தில், நகர்மன்ற தலைவர்**

| பொருள் எண் மற்றும் கூட்ட பொருள்கள் விபரம் | தீர்மான எண் |
|---|---|
| **பொருள் எண் : 1**<br>நகர்மன்ற தலைவர் திருமதி.**செ.புவனப்பிரியா செந்தில்** அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>1. திருவாரூர் நகர பேருந்து நிலையத்தில் ஆழித்தேருடன் கூடிய "நம்ம திருவாரூர்" என்ற வாசகத்துடன் சின்னம் அமைத்து தர கோருதல்.<br>2. சம்மந்தமூர்த்தி பிள்ளையார் கோவில் குளத்தை தூர்வாரி சுற்றுச்சுவர் அமைத்து தர கோருதல்.<br>3. 2026 சட்டமன்ற தேர்தலில் திருவாரூர் சட்டமன்ற தொகுதியில் 3வது முறையாக சட்டமன்ற உறுப்பினராச வெற்றிப்பெற்ற மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திரு.பூண்டி. கே. கலைவாணன் அவர்களக்கு நகர்மன்றத்தின் சார்பாக வாழ்த்துகள் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றி தர கோருதல்.<br>4. திருவாரூர் நகர்மன்ற முன்னாள் துணைத்தவைலர் திரு.கு.தெ.முத்து அவர்களின்<br>மறைவிற்கு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றுதல் தொடர்பாக. | 1224.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 2**<br>நகர்மன்ற துணைத்தலைவர் திருமதி.ச.அகிலா சந்திரசேகர் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>1. மருதபாடி பெரியாச்சி கோவில் அருகே மினிபவர் பம்ப் அமைத்து தர கோருதல்<br>2. மருதபாடி முழுவதும் தார்சாலை அமைத்து தர கோருதல்<br>3. வாசன் நகரில் Lifting Station அமைத்து தர கோருதல்<br>4. செங்கழுநீர் குளம் அருகே மற்றும் வாசன் நகரில் தலா ஒரு மின்கம்பம் மற்றும் மின்விளக்கு அமைத்து தர கோருதல்<br>5. எனது வார்டுக்குட்பட்ட 4 இடங்களில் கல்வெர்ட் அமைத்து தர கோருதல் (வாசன் நகரிலிருந்து மருதப்பட்டினம் போகும் வழி, வாய்க்கால் ஓரம், முத்தமிழ் நகர் போகும் வழி, பிள்ளையார் கோவில் தெரு) | 1225.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 3**<br>1வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.கலியபெருமாள் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய குடியிருப்பில் பூங்கா, சமுதாயக்கூடம் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல். | 1226.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 4**<br>2வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.க.மலர்விழி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>1. ஈவிஎஸ் நகர் பகுதியில் உள்ள நூலகத்தினை சீரமைத்து தர கோருதல்<br>2. ஈவிஎஸ் நகர் பகுதியில் பூங்கா அமைத்து தர கோருதல். | 1227.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 5**<br>3வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எம் கஸ்தூரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. வடக்கு கொத்தத்தெரு , மேல தைக்கால்தெரு, பழுதடைந்த சாலையை தார்சாலையாக மாற்றம் செய்து தர கோருதல். | 1228.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 2. ஐயனார் கோவில் இருக்கும் தெருவில் உள்ள சாலையை தார்சாலையாக அமைத்து தர கோருதல்<br>3. ஐயனார்கோவில்தெரு, வடக்கு கொத்தத்தெரு, தெற்கு கொத்தத்தெரு, கீழகொத்தத்தெரு ஆகிய பகுதிகளில் மழைநீர் வடிகால் அமைத்துதர கோருதல். | |
| **பொருள் எண் : 6**<br>4வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி. J.பெனாசிர் ஜாஸ்மின் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>**1.** எனது வார்டுக்குட்பட்டஅனைத்து வீடுகள் மற்றும் வணிக கட்டிடங்களுக்கு கட்டிடத்தின் முகப்பில் நிரந்தர கதவு எண் பலகை அமைத்து தர கோருதல் மற்றும் இதுவரை கதவு எண் வழங்கப்படாத வீடுகளுக்கு கதவு எண் வழங்க கோருதல்.<br>1. கடைதெருவில் சேதமடைந்துள்ள மழைநீர் வடிகால் சரிசெய்து தர கோருதல்<br>2. சாமந்தான் பாளையம் பகுதியில்சேதமடைந்துள்ள சமுதாய கூடத்தினை இடித்துவிட்டு புதியதாக சமுதாய கூடம் அமைத்துதர கோருதல்<br>3. மழைகாலத்திற்கு முன் வாய்க்கால் மற்றும் குளங்களை தூர்வாரி சுத்தம் செய்து தர கோருதல்<br>4. வார்டுக்குட்பட்ட பகுதியில் மஞ்சளாக எரியும் தெருவிளக்குகளை மாற்றி தர கோருதல், தெருவிளக்கின்றி இருளில் உள்ள கீரின் நகர், மலாய கார்டன் பகுதிகளுக்கு தெருவிளக்கு அமைத்து தர கோருதல்.<br>5. மலாயா கார்டன், துக்கான் நகர், கீரீன் நகர் பகுதிகளில் உள்ள மண் சாலைகளை தார்சாலையாக அமைத்துதர கோருதல்<br>6. புதுமனை குளத்தின் நடைபாதை மற்றும் இருக்கை சேதமடைந்துள்ளதை சரிசெய்து தர கோருதல்<br>7. நடுத்தெரு சந்து, பள்ளிவாசல் தெருவில் பேவர் பிளாக் சாலை அமைத்துதர கோருதல்<br>8. மலாயா கார்டன் மற்றும் சாமந்தாம்பாளையம் பகுதியில் கல்வெட் அமைத்து தர கோருதல்<br>**9.** புதுமனை குளத்தினை பராமரிக்க பணி ஆட்களை அமர்த்தி தர கோருதல் | 1229.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 7**<br>5வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பி. ஷகிலா பானு அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. தெற்கு தெரு சாலை, 52 பணப்பகுதி நகர், சூஃபி நகர் முதல் எம்எம்ஜ நகர் செல்லும் வழி வரை, ராமகே ரோடு, எம்.எம்.ஜ நகரில் இருந்து மேலத்தெரு செல்லும்வழி வரை, கேக்கரை கீழத்தெரு, கேக்கரை பிடாரிகோவில்தெரு முதலிய பகுதிகளுக்கு சாலைவசதி அமைத்துதர கோருதல்.<br>2. தெற்கு தெருவில் ஃபேவர் பிளாக் சாலை அமைத்துதர கோருதல் மற்றும் எனது வார்டில் பாதாள சாக்கடை (மேன்ஹோல்) மூடி அமைத்தது தர கோருதல்.<br>3. தெற்கு தெரு மருத்துவமனை எதிரில் மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைத்து தர கோருதல்<br>4. கேக்கரை மாரியம்மன் கோவில் எதிர்புறம் மின்கம்பம் அமைத்து மின்விளக்கு அமைத்துதர கோருதல்<br>5. 5–வது வார்டில் விடுப்பட்ட அனைத்து பகுதிகளிலும் மின்கம்பம் அமைத்து மின் விளக்கு அமைத்துதர கோருதல்<br>6. 52 பணப்பகுதி நகரில் சிறுவர் பூங்கா அமைத்து தர கோருதல்<br>7. கேக்கரை சிவன்கோவில் அருகில் ஈமகிரியை மண்டபம் அமைத்து தர கோருதல். | 1230.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 8. கேக்கரை பிடாரி கோவில் தெருவில் புதியதாக பாதாள சாக்கடை அமைத்து தர கோருதல்<br>9. கேக்கரை மற்றும் பிடாரிகோவில்தெரு பகுதிகளில் வாய்க்கால்களை தூர்வாரி சுத்தம் செய்துதர கோருதல்<br>10.தீனா இப்ராம்சா தெரு, சூஃபி நகர் தெற்கு தெரு, அழகிய தமிழ் நகர் ஆகிய பகுதிகளுக்கு பெயர் பலகை அமைத்து தர கோருதல். | |
| **பொருள் எண் : 8**<br>6வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.பா.ஐஸ்வர்யா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. வி.ஐ.பி நகர், அர்ஷத் நகர், திருவள்ளுவர் தெரு, ராமேகே சந்து மற்றும் மஜீத் நகர் (ஆசாத் நகர்) ஆகிய மண் சாலைகளை. தார் சாலை அல்லது பேவர்பிளாக் சாலைகளாக மாற்றி தர கோருதல்.<br>2. ராமகே ரோடு கேட்டு தெருவில் உள்ள வாய்க்காலில் நடைபாதையில் தடுப்பு சுவர் அமைத்து தர கோருதல்.<br>3. எனது வார்டில் சுமார் 300 மீட்டர் அளவில் இரண்டு தெருக்களில் தெரு விளக்கு மின் கம்பி புதிதாக அமைத்து தெருவிளக்கு அமைத்து தர கோருதல்.<br>4. விருப்பாச்சி நடப்பு தெருவில் உள்ள விருப்பாச்சி குளத்தை தூர்வாரி மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வர கோருதல்.<br>5. எனது வார்டில் புதிதாக 15 மின்விளக்குகள் அமைத்து தர கோருதல். | 1231.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 9**<br>7வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.கோ.வரதராஜன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. மாருதி நகர், நல்லப்பா நகர், தென்றல் நகர் விரிவாக்கம் பகுதியில் தெருவிளக்கு அமைத்துதர கோருதல்.<br>2. தென்றல் நகர், வெங்கடேஸ்வரா நகர் , ஸ்ரீதேவி நகர் , அரசன்குளத்தெரு பகுதிகளுக்கு சாலை அமைத்து தர கோருதல்<br>1. தென்றல் நகர், ஸ்ரீதேவி நகர் பூங்காவை மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர கோருதல்<br>2. காகித காரத்தெரு, கம்பர் தெரு பாலம் பழுதடைந்துள்ளதை சரிசெய்து தர கோருதல்.<br>3. காகிதகாரத்தெருவில் மினி போர்வெல் அமைத்து தர கோருதல்<br>4. வெங்கடேஸ்வரா நகரில் பாதாள சாக்கடை அமைத்து தர கோருதல்<br>5. B வாய்க்காலுக்கு புதிய பாலம் அமைத்து தர கோருதல்<br>6. யு.எஸ்.ஆர் நகர், நல்லப்பா நகர் பகுதியில் வழிந்தோடும் பாதாள சாக்கடை சரிசெய்த தர கோருதல்<br>7. நல்லப்பா நகரில் நகராட்சி பூங்கா தனியாரால் ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதை மீட்டெடுக்க கோருதல்<br>8. காகித காரத்தெரு புதிய பாலத்திற்கும், சாலைக்கும் இணைப்பு சாலை அமைத்து தர கோருதல்<br>9. தோப்பு தெரு, கம்பர்தெரு பகுதியில் உள்ள சமுதாய கூடத்தினை சீர்செய்து தர கோருதல்.<br>10. தோப்பு தெரு குடிநீர் குழாய்க்கு தளம் அமைக்க கோருதல்<br>11. தென்றல் நகர் விளையாட்டு திடலுக்கு சுற்று சுவர் அமைத்து தர கோருதல்<br>12. செட்டி குளத்திற்கு இணைப்பு பாதை அமைத்து தர கோருதல், | 1232.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 10**<br>12வது வார்டு நகர்மன்ற உறுப்பினர்வாரை திரு.எஸ்.பிரகாஷ் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம். | 1233.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 1. அய்யனார் கோவில் தெரு சந்தில் பேவர் பிளாக் சாலை அமைக்க கோருதல்<br>2. கீழ சன்னதி முதல் சந்தில் சிமெண்ட் சாலை அமைத்து தர கோருதல்.<br>3. கீழ சன்னதி தெரு, எருத்துக்காரத்தெருவில் மழைநீர் வடிகால் வசதி அமைத்து தர கோருதல் | |
| **பொருள் எண் : 11**<br>13 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.எஸ்.உமாமகேஸ்வரி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்<br>1. துர்க்கை சந்நதி தெருவில் புதிய சிமெண்ட சாலை வசதி அமைத்துதர கோருதல்<br>2. 13வது வார்டு அனைத்து பகுதிகளிலும் மழைநீர் வடிகால்களையும் சரிசெய்துதர கோருதல்<br>3. தெற்கு வீதியில் கௌரிசாமி நகராட்சி நடுநிலைப்பள்ளி அருகில் அமைந்துள்ள சேதமடைந்த பழைய பேரூந்து நிறுத்தத்தை அகற்றிவிட்டு புதிதாக கட்டி தரகோருதல்.<br>4. நமக்கு நாமே திட்டத்தின் கீழ் வார்டு முழுவதும் கண்காணிப்பு கேமரா வசதி செய்து தர கோருதல்.<br>5. 13வது வார்டில் விடுபட்ட இடங்களில் கல்வர்ட் அமைத்து தரகோருதல்<br>6. வார்டில் ஞாயிற்று கிழமைகளிலும் குப்பைகளை சேகரிக்கவும், தினந்தோறும் தூய்மை பணி மேற்கொள்ளவும் நடவடிக்கை எடுக்க வேண்டுதல். | 1234.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 12**<br>15 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ். மூர்த்தி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. ரயில்வே காலனி கீழ்புறம் பகுதியில் சாலை வசதி அமைத்து தரகோருதல்.<br>2. வன்மீகபுரம் புகுதியில் சாலை சரிசெய்து தரகோருதல்.<br>3. தியாகபெருமாநல்லூர் பகுதியில் சாலை வசதி செய்து தர கோருதல் மற்றும் திலகர் 1வது தெரு , 2வது தெருவில் சாலை வசதி ஏற்படுத்தி தர கோருதல். | 1235.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 13**<br>16வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் எஸ்.என். அசோகன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. காட்டுக்காரத்தெருவில் மழைநீர் வடிகால் புதுப்பித்தல் மற்றும் இரண்டு கல்வெட்டுகள் புதுப்பித்து தர கோருதல்<br>2. காட்டுக்காரத்தெரு காத்தாயி அம்மன் கோயில் தெற்கு பகுதியில் சேதமடைந்த தார்சாலை புதுப்பித்தல் மற்றும் அப்பகுதியில் மண்சாலையை தார்சாலையாக மாற்றி தர கோருதல்<br>3. முக்தி விநாயகர் கோவில் தென்கரை மற்றும் வடக்கு பகுதியில் உள்ள சாலையை புதுப்பித்து தர கோருதல்<br>4. பெருமாள் கோயில் சன்னதி தெருவில் உள்ள தாமரைக்குளத்தின் சுற்றுப்பாதையில் நடைபயிற்சி மேற்கொள்ள ஏதுவாக மின் விளக்கு வசதி ஏற்படுத்தவும் மற்றும் ஓய்வெடுக்க நான்கு பெஞ்ச் அமைத்து தர கோருதல்<br>5. மடப்புரம் நகராட்சி உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள விளையாட்டு மைதானம் பணிகளை விரைவில் நிறைவேற்றி தர கோருதல் | 1236.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 14**<br>17வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.சி.சசிகலா அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. சித்திவிநாயகர் கோவில் குளத்திற்கு சுற்றுசுவர் கட்டிதர கோருதல்.<br>2. நெட்டிவேலைக்கார தெரு சுகாதார இயக்குநர் அலுவலகம் எதிரில் சிறுவர் | 1237.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| பூங்கா அமைத்து தர கோருதல்.<br>3. முழுவதுமாக சிதைந்துள்ள மடப்புரம்பாட்டை முதல் முடுக்கு தெரு வரையிலான மழை நீர் வடிகாலை வரும் மழை காலத்திற்குள் புதிதாக அமைத்து தர கோருதல். | |
| **பொருள் எண் : 15**<br>18வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ரா.ஆசைமணி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. திருமஞ்சன வீதியில் உள்ள பாதாளச்சாக்கடை zone 3 சுற்றுச்சுவரை உயர்த்தி தர கோருதல்.<br>2. காட்டுக்காரத்தெருவிலிருந்து திருமஞ்சன வீதி வரை மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல்.<br>3. ஆறுமுக தோட்டம் பகுதியில் சாலை அமைத்து தர கோருதல். | 1238.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 16**<br>19வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ஜெ.விஜயலெட்சுமி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. காட்டுக்காரத்தெரு முருகன் கோவிலிருந்து புற்றுகோவில் வரை மற்றும் ருத்திரகோடீஸ்வரர் கோவிலிலிருந்து புற்றுகோவில் வரை சாலை வசதி அமைத்துதர கோருதல்.<br>2. காட்டுக்காரத்தெரு முருகன் கோவில் அருகில் சிறிய 4 அடி சாலை அமைத்து தர கோருதல்<br>3. குளுந்தான் குளம் கீழ்கரையில் பாதாள சாக்கடை பணி நடைபெற்ற இடங்களில் சாலை சீரமைத்துதர கோருதல்<br>4. சிவம் நகரில் மழைநீர் வடிகால் அமைத்துதர கோருதல்<br>5. 19வது வார்டில் 7 மின் கம்பங்கள் கீழே விழும் நிலையில் உள்ளது .அதனை மாற்றி புதிய மின்கம்பம் அமைத்துதரகோருதல். | 1239.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 17**<br>20 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.வே.கமலாம்பாள் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. அழகிரி நகரில் இரண்டு பகுதியில் சிமெண்ட் சாலை அமைத்து தர கோருதல்.<br>2. அழகிரி நகரில் மழைநீர் வடிகால் தூர்வாரி தர கோருதல்.<br>3. சீராத்தோப்பு தெருவில் கழிவறை கட்டி தர கோருதல்.<br>4. சீராத்தோப்பு மற்றும் சீரா தெருவில் சிமெண்ட் சாலை அமைத்து தர கோருதல். | 1240.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 18**<br>22 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.ரெ.ரேவதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>மருதப்பட்டினம் மெயின் ரோட்டில் அமைந்திருக்கும் நீர்தேக்க தொட்டி பல வருடங்களாக உபயோகத்தில் இல்லாமல் பழுதடைந்திருப்பதை இடித்துவிட்டு அவ்விடத்தில் நியாவிலைக்கடை புதியதாக கட்டித்தர கோருதல் | 1241.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 19**<br>23 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ச.கருணாநிதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. கட்டளைதோப்பு தெருவில் புதிய சாலை மற்றும் மழைநீர் வடிகால் அமைத்துத்தர கோருதல்.<br>2. செங்கமேட்டு தெருவில் உள்ள சிறுபாலம் இடிந்துவிழும் நிலையில் உள்ளதை அகற்றிவிட்டு புதிய சிறுபாலம் அமைத்துத்தர கோருதல்.<br>3. வார்டு முழுவதும் உள்ள தார் மற்றும் சிமெண்ட் சாலைகளை தரம் உயர்த்தி புதிய சாலை அமைத்து தர கோருதல். | 1242.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 4. வார்டு முழுவதும் உள்ள மண்சாலைகளை தார்சாலையாக அமைத்து தர கோருதல்<br>5. வார்டு முழுவதும் உள்ள பாதாள சாக்கடை மூடிகளை உயர்த்தி தர கோருதல்.<br>6. வார்டில் போதிய வெளிச்சம் இல்லாத தெருவிளக்குகளை புதிய விளக்குகளாக மாற்றிதர கோருதல் | |
| **பொருள் எண் : 20**<br>24 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.ஆர்.சின்னவீரன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. கொடிக்கால் தெருவில் உள்ள சேதமடைந்த படித்துறையை புதியதாக அமைத்துதர கோருதல்.<br>2. மாரியம்மன் கோவில் தெரு ஆசாத்ரோட்டில் உள்ள மண் சாலையை 250 மீட்டருக்கு சிமெண்ட் சாலையாக அமைத்துத்தர கோருதல்.<br>3. வார்டு முழுவதும் 600 மீட்டர் தொலைவிற்கு மழைநீர் வடிகால் அமைத்துதர கோருதல்.<br>4. வண்டிக்காரத்தெருவில் சிறுவர்களுக்கான சிறுவர் பூங்கா அமைத்துதர கோருதல். | 1243.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 21**<br>25வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் ஜெ.அய்யனார் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. பழைய தஞ்சை சாலையில் நகராட்சிக்கு சொந்தமான எரிவாயு மயானத்தில் இறந்தவர்களின் உடல்களை புதைக்க விரும்புபவர்களுக்கு நிபந்தனையின்றி புதைக்க அனுமதி கோருதல் தொடர்பாக<br>2. அண்ணா சாலை முதல் எல்லையம்மன் தெற்கு வீதி வரை மற்றும் தஞ்சை சாலை , குரு நகர், குருதெட்சிணாமூர்த்தி நகர் முதல் பழைய தஞ்சை சாலை வரை பாதாள சாக்கடை அடைப்புகளை சரிசெய்தும், மெஷின் ஹோல்களை சுத்தம் செய்தும் தர கோருதல். | 1244.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 22**<br>26 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.க.பாரதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. பெரியமில்தெரு பாய்பிளாட் பகுதியில் உள்ள ஐந்து சிறு சாலைகளை பேவர் பிளாக் அல்லது சிமெண்ட் சாலைகளாக அமைத்து தர கோருதல்<br>2. பிஎஸ்என்எல் அலுவலகம் முன்புறம் மற்றும் பின்புறம் உள்ள சிமெண்ட் சாலையை புதியதாக அமைத்துதர கோருதல்<br>3.பெரியமில்தெரு மகா மாரியம்மன் கோவில் எதிர்புறம் உள்ள மண்சாலையை சிமெண்ட் சாலை அல்லது பேவர் பிளாக் சாலையாக அமைத்துதர கோருதல்.<br>3. ஆறுமுகம் தெருவில் உள்ள சிமெண்ட் சாலையை சீரமைத்துதர கோருதல்.<br>4. பெரியமில் தெரு மின்மாற்றியிலிருந்து வாய்க்கால் பகுதிக்கு செல்லும் மழைநீர் வடிகால் மற்றும் மின்மாற்றி எதிர்புறம் மழைநீர் வடிகால் புதியதாக அமைத்து தர கோருதல்<br>5. BSNL அலுவலகம் பின்புறம் உள்ள மழைநீர் வடிகால் புதியதாக அமைத்து தர கோருதல்<br>6. BSNL அலுவலகம் எதிர்புறம் உள்ள பாலம் புதியதாக அமைத்து தர கோருதல்<br>7. பெரியமில்தெரு, ரயில்வே போலீஸ்காலனி எதிர்புறம், பாய்பிளாட் சாலையின் இறுதிபகுதி மற்றும் ஆறுமுகம் தெருவில் மின்கம்பம் அமைத்து தெருவிளக்கு அமைத்துதர கோரப்படுகிறது. | 1245.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 23**<br>27 வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.தினேஷ்குமார் | 1246.<br>தீர்மானிக்கப்பட்டது |

| | |
|---|---|
| அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. ஐ.பி.கோயில் தெற்கு தெரு, உபசந்துகள் மற்றும் ஐ.பி கோவில் மேலத்தெரு, உபசந்துகள் மண்சாலையாக உள்ளதை ஹாலோ பிளாக் சாலையாக அமைத்துதர கோருதல்.<br>2. கே.டி.ஆர் எஸ்டேட் பகுதியில் பூங்கா அமைத்து தர கோருதல்,<br>3. ஆத்தாகுளதை தூர்வாருதல் மற்றும் மழைநீர் வடிகால் அமைத்து தர கோருதல். | |
| **பொருள் எண் : 24**<br>28வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திருமதி.தி.கோமதி அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. கந்தன்தெரு, மன்மதன் கோயில் தெரு, கலைவாணர் வளைவு ஆகிய பகுதிகயில் சாலைவசதி ஏற்படுத்திதரகோருதல்<br>2. இடும்பன்நகர் வழியாக வாளவாய்க்கால் பகுதிக்கு வடிகால் அமைத்து தர கோருதல்<br>3. கணேசா நகரில் வடிகால் அமைத்து தர கோருதல்<br>4. நார்சிங்கம்பேட்டை ஆற்று பகுதியில் இரும்பு தடுப்பு செய்து தரகோருதல்<br>5. பாரதி தெருவில் சமுதாய கூடம், புதியதாக கழிப்பறை வசதி செய்து தர கோருதல்.<br>6. பாரதி தெரு கோவில் தெருவில் மின் விளக்கு அமைத்து தர கோருதல்.<br>7. 28வது வார்டில் அனைத்து மின்விளக்குகளையும் புதியதாக மாற்றி தர கோருதல் | 1247.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 25**<br>29வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.எஸ்.அன்வர்உசேன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. எனது வார்டில் மஞ்சக்கொல்லை தோப்பில் உள்ள நியாவிலை கடையில் உள்ள மேல்கூரை பழுதடைந்துள்ளதால், மேற்கூரையின் மேல் தகரசெட் அமைத்துதர கோருதல்.<br>2. சின்னமேட்டுப்பாளையம் பிடாரிகோயில்தெருவில் உள்ள மண்சாலையை பேவர்பிளாக் சாலையாக அமைத்து தர கோருதல். | 1248.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 26**<br>30வது வார்டு நகர்மன்ற உறுப்பினர் திரு.சோ.புருஷோத்தமன் அவர்களால் கொண்டுவரப்படும் தீர்மானம்.<br>1. கிடாரம்கொண்டான் நடுத்தெரு, பள்ளிக்கூடத்சந்துதெரு, பெரியார் தெரு, தெற்கு தெரு ஆகிய இடங்களில் பழுதான சாலையை புதிய தார்சாலையாக அமைத்து தர கோருதல்.<br>2. கிடாரங்கொண்டான் ரயிலடி தெரு பகுதியில் மழைநிர் வடிகால் தடுப்பு சுவர் அமைத்துதர கோருதல். | 1249.<br>தீர்மானிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 27**<br>தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களுக்கு 2026-2027ம் ஆண்டிற்கு செலுத்த வேண்டிய பங்குத் தொகை ரூ.1,25,000/- ஐ செலுத்திடவும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**ந.க.எண்**.7074 /2012/சி1 | 1250.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது<br>. |

| | |
|---|---|
| **பொருள் எண் : 28**<br>இந்நகராட்சியின் திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் , புகார்கள், நாளிதழ்களில் செய்தியாக வெளிவருவதை நகரமன்ற தலைவர், மற்றும் ஆணையர் அவர்கள் அறியும்வண்ணம் நகரமன்ற தலைவர் அறை, ஆணையர் குடியிருப்பு மற்றும் பொதுப்பிரிவு அலுவலகத்திற்கு தினசரி நாளிதழ்கள் வாங்கிடவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.50,000/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்<br>**ந.க.எண்.** /2025/சி1 | 1251.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 29**<br>இந்நகராட்சிக்கு 2026-2027ம் ஆண்டிற்கு தேவையான அலுவலக உபயோக பொருட்கள், எழுது பொருட்கள், பதிவேடுகள் மற்றும் கணினி பொருட்கள் A4 பேப்பர், Legal பேப்பர், டோனர், ரேப்பர் , பிறப்பு மற்றும் இறப்பு சான்றிதழ் கோரும் விண்ணப்பம் , சொத்துவரி , குடிநீர் கட்டணம் பெயர் மாற்றம் கோரும் விண்ணப்பங்கள், D&O விண்ணப்பங்கள் மற்றும் இதர பல்வகை பதிவேடுகள் ஆகியவற்றை திருச்சி தமிழ்நாடு மல்டிபர்பஸ் இண்ட்கோ சர்வ் கூட்டுறவு நிறுவனத்தில் வாங்கிக்கொள்ளவும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.10,00,000/-ற்கும் மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு** :<br>மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>**ந.க.எண்.** 2340 / 2019/பி3 | 1252.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 30**<br>திருவாரூர் மாவட்டம் திருவாரூர் நகராட்சி முதல்நிலை நகராட்சியாகும். ஆகும். 2011ம் ஆண்டு கணக்கெடுப்பின்படி மக்கள் தொகை 58301 இந்நகராட்சியின் மொத்த பரப்பளவு 10.47 சதுர கிலோ மீட்டர் மற்றும் 30 வார்டுகள் உள்ளது. இதில் பாதாளச்சாக்கடை கழிவுநீர் உந்து குழாயின் நீளம் 67.642 கி.மீட்டரும் மற்றும் கடத்து குழாய்கள் 9.390 கி.மீட்டர் ஆகும்.<br>மேலும் பாதாளச்சாக்கடை திட்டப்பணியானது தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் 2006ம் ஆண்டு துவங்கி 2014ம் ஆண்டு பணி முழுமையாக முடிக்கப்பட்டு தற்சமயம் இயங்கி வருகிறது. மேற்காணும் பராமரிப்பு பணியானது ஒப்பந்த அடிப்படையில் 01.11.2016 முதல் மெர்சஸ்.வி.பி அசோசியேட்ஸ். சென்னை தனியார் நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த நெறிமுறைகளின்படி பாதாளச்சாக்கடை கழிவுநீர் குழாய் அடைப்பு நீக்குதல், 15 கழிவுநீர் நீரேற்று நிலையங்கள், 5 உந்து நிலையங்கள் மற்றும் கழிவுநீர் இணைப்பு தொட்டிகள் 2445 எண்ணிக்கைகள் இந்நிறுவனத்தின் மூலம் பராமரிக்கப்பட்டு வருகிறது.<br>மேற்படி ஒப்பந்த நிறுவனத்தின் ஒப்பந்தக்காலம் 26.10.2022 உடன் முடிவடைந்தது. பாதாளச்சாக்கடை திட்ட பணிகள் மேற்கொள்ள நகராட்சி பணியாளர்கள் எவரும் இல்லாத காரணத்தினால் மீள ஒப்பந்த அடிப்படையில் பணிகள் மேற்கொள்ளவும் மற்றும் தொடர் அறிவுறுத்தப்பட்டது. நாள்:17.08.2022ன்படி நடவடிக்கை எடுத்திடவும் அரசாணை எண்.113 அதனைத்தொடர்ந்து வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை நியமித்துக்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களின் கடிதத்தில் அறிவுறுத்தியதன்பேரில் வெளிக்கொணர்வு மூலம் பணியாளர்களை நியமிக்கப்படும் வரை, பாதாளச்சாக்கடை பராமரிப்பின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு பராமரிப்பு பணியினை தற்போது மேற்கொண்டு வரும் மெர்சஸ்.வி.பி அசோசியேட்ஸ் என்ற நிறுவனம் மூலமே புதிய ஒப்பந்தப்புள்ளி கோரப்படும்வரையில் அதே ஒப்பந்த விலை விகிதத்தில் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மான எண்.304 நாள்.30.06.2023 ன் படி மன்றத்தில் அனுமதி பெறப்பட்டு காலநீட்டிப்பு செய்து பணி உத்தரவு வழங்கப்பட்டது. எனவே, நீண்டகாலமாக ஒப்பந்தப்புள்ளி கோரப்படாமல் அதே விலை விகிதத்தில் | 1253.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| காலநீட்டிப்பு செய்யப்பட்டு வருவதனால் திருவாரூர் நகராட்சி கழிவுநீர் உந்து நிலையம். கழிவுநீரேற்று நிலையம், மெஷின் ஹோல் போன்றவைகளை இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணிக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி மேல்நடவடிக்கை தொடர விரிவான திட்ட அறிக்கை ரூ.2.75,23,000/– (வருடாந்திர பராமரிப்பு – ஒரு வருடத்திற்கு) தயார் செய்யப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர். தஞ்சாவூர் அவர்களின் வழியாக முன்மொழிவு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு:–**<br>1.மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2..நிர்வாக அனுமதி வேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர். சென்னை அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>ந.க.எண்.754/2026/இ1 | |
| **பொருள் எண் : 31**<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் பேருந்து நிலையம், காய்கறி மார்க்கெட், மீன் மார்க்கெட், மூலதன மானிய நிதி திட்டத்தின் கீழ் உயர்மட்ட பாலம் அமைக்கும் பணி, TNCRUDP திட்டத்தின் கீழ் விடுபட்டபகுதிகளில் பாதாளச்சாக்கடை அமைக்கும் பணி மற்றும் இதர அரசின் முக்கிய திட்டப்பணிகள் நடைபெற்று வருவதனால், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr.No.539/2005/F3 நாள்.28.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி, பொதுப்பணித்துறையின் 2024–25 விலை விகிதத்தின்படி Technical Worker Grade – II நிலையில் ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் வழங்க ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.814 + 18% ஜிஎஸ்டி உட்பட ரூ.960.00 வீதம் 5 நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள 01.04.2025 முதல் 30.09.2025 வரை மதிப்பீடு ரூ.9,55,000/– இந்நகர்மன்ற தீர்மான எண்.860 நாள்.26.03.2025 ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஆறு மாத காலங்களுக்கு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1176 நாள் 27.02.2026 ன் படி 31.05.2026 ல் முடிவடைய உள்ளதால் 31.08.2026 வரை மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**அலுவலக குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட பணியினை இந்நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. 01.06.2026 முதல் 31.08.2026 வரை மூன்று மாத காலங்கள் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.<br>**ந.க.எண். 1778/2022/இ1** | 1254.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 32**<br>திருவாரூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான அம்மையப்பன் தலைமை நீரேற்று நிலையம், மடப்புரம் மேல்நிலை நீர்த்தேக்க நிலையம் மற்றும் சந்தைபேட்டை மேல்நிலை நீர்த்தேக்க நிலையத்தில் மோட்டார்களை இயக்கிட இந்நகராட்சியில் பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் இல்லாததால், நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் வழிகாட்டு நெறிமுறையில் ஒப்பந்த அடிப்படையில் Out Source முறையில் பணியாளர்களை அமர்த்தி மேற்கொள்ள Lr.No.539/2005/F3 நாள்.28.01.2005ல் அனுமதிக்கப்பட்டுள்ளதன்படி, பொதுப்பணிதுறையின் 2024–25 விலை விகிதத்தின்படி ஒப்பந்தப்புள்ளி மூலம் பணியாளர்களுக்கு ஊதியம் | 1255.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

வழங்க Electrician Grade – II நிலையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக் .908 + 18% ஜிஎஸ்டி உட்பட ரூ.1071.00 வீதம் 3 நபர்கள் மற்றும் Electrical Helper நிலையில் ஒரு நபருக்கு நாள் ஒன்றுக் .708 + 18% ஜிஎஸ்டி உட்பட ரூ.835.00 வீதம் 3 நபர்கள் கொண்டு பணி மேற்கொள்ள 01.04.2025 முதல் 30.09.2025 வரை மதிப்பீடு ரூ.8,60,000/– இந்நகர்மன்ற தீர்மான எண்.859 நாள்.26.03.2025 ன்படி நிர்வாக அனுமதி வழுங்கப்பட்டு ஆறு மாத காலங்களுக்கு வேலை உத்தரவு வழுங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட பணிக்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 1176 நாள்.27.02.2026 ன் படி 31.05.2026 ல் முடிவடைய உள்ளதால் 31.08.2026 வரை மூன்று மாதங்களுக்கு கால நீட்டிப்பு செய்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட பணியினை இந்நகராட்சி குடிநீர் / பொதுநிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
3. 01.06.2026 முதல் 31.08.2026 வரை மூன்று மாத காலங்கள் நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கால நீட்டிப்பு செய்யப்பட்டதை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண். 1778/2022/இ1**

---

**பொருள் எண் : 33**

1256.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தெற்குவீதியில் அமைந்துள்ள நூலகம் மற்றும் அறிவுசார் மையத்தில் போட்டி தேர்வுக்கு தயாராகும் மாணவ மாணவியர்கள் பயன்பெறும் வகையில் தினமலர், தினமணி மற்றும் Indian Express தினசரி நாளிதழ் வழங்கிடும் பணிக்கு (ஒரு வருடத்திற்கு) மேற்கொள்ள ரூ.12,000/– செலவினம் ஆகிறது. மேற்படி தொகையினை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதி வழங்கிட மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :–**

மன்றம் அனுமதி வழங்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

---

**பொருள் எண் : 34**

1257.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 25 முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தில் Fencing, வரி மையம் தடுப்புச்சுவர் மற்றும் சிசிடிவி கேமரா, போன்ற கூடுதல் பணிக்கு .10.00 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025–26 ன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1188 நாள்.27.02.2025 ன் படி அனுமதி பெறப்பட்டு 13.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத்தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 25 முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தில் Fencing, வரி மையம் தடுப்புச்சுவர் மற்றும் சிசிடிவி கேமரா, போன்ற கூடுதல் பணி | 10.00 | M/s.Sura Builders, Erode | 0.05 % குறைவு |
| | | | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 1.24 % அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் “M/s.Sura Builders, Erode” என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 35**

1258.
அலுவலககுறிப்பு
அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 25 முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தில் மின்விளக்குகள் அமைக்கும் பணிக்கு ரூ.13.70 லட்சம் மதிப்பீட்டிற்கு பொது நிதி 2025-26 ன் கீழ் மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1189 நாள்.27.02.2025 ன் படி அனுமதி பெறப்பட்டு 13.02.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்கு உட்பட்ட வார்டு எண் 25 முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேருந்து நிலையத்தில் மின்விளக்குகள் அமைக்கும் பணிகள் | 13.70 | M/s.Sura Builders, Erode | 0.02 % குறைவு |
| | | | திரு.எஸ்.தணிகாசலம், திருவாரூர் | 1.10 % அதிகம் |

மேற்காணும் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரர் “M/s.Sura Builders, Erode” என்பவரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1008/2025/இ1**

**பொருள் எண் : 36**

1259.
அலுவலககுறிப்பு
அனுமதிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.DMA/2026/M1 நாள்.23.05.2026 ன் படி அம்மா உணவகத்தினை சீரமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 பனகல் சாலையில் அமைந்துள்ள அம்மா

உணவகத்தினை சீரமைத்திடும் பணிக்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீடு ரூ.2.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. பணியின் அவசரம் அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று கோப்பின் மீது மேல்நடவடிக்கை தொடரப்பட்டதனை மன்றம் ஏற்கலாம்.

**ந.க.எண்.1295/2020/இ1**

---

**பொருள் எண் : 37**

1260.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.DMA/2026/M1 நாள்.23.05.2026 ன் படி அம்மா உணவகத்தினை சீரமைத்திட அறிவுறுத்தப்பட்டது. அதன்படி, திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 பனகல் சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தினை சீரமைத்திடும் பணியினை நகராட்சி பொது நிதி 2026-27 ன் கீழ் பணிகள் மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று 17.06.2026 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதனை தொடர்ந்து கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ.இலட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | விலை விகிதம் |
|---|---|---|---|---|
| 1. | திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 20 பனகல் சாலையில் அமைந்துள்ள அம்மா உணவகத்தினை சீரமைத்திடும் பணி | 2.00 | திரு.எஸ்.தணிகாசலம் திருவாரூர் | 0.94 % குறைவு |
| | | | திரு.கே.செந்தில்குமார் திருவாரூர் | 0.31 % குறைவு |

மேற்காணும் பணியினை மேற்கொள்ள ஒப்பந்ததாரரிடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளி ஏற்கப்பட்டும், பணியின் அவசர அவசியம் கருதி பணியினை மேற்கொள்ள வேலை உத்தரவு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. மேற்காணும் பணிகளின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு மதிப்பீட்டைவிட குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஒப்பந்ததாரரின் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று நகர்மன்றத் தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணியினை மேற்கொள்ள சம்மந்தப்பட்ட ஒப்பந்ததாரருக்கு பணி உத்தரவு வழங்கப்பட்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 1295/2020/இ1**

---

**பொருள் எண் : 38**

1261.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடிநீர் பகிர்மான குழாய் மற்றும் பிரதான குழாய் பராமரிக்கும் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.90 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| | |
|---|---|
| **<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1009/2025/இ1** | |
| **பொருள் எண் : 39**<br>ஒருங்கிணைப்பு மையங்களின் மூலம் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் காலை உணவு திட்டத்தின்படி, நகராட்சி தொடக்கப்பள்ளி மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் 1 முதல் 5 வகுப்பு வரை உள்ள மாணவ மாணவியர்களுக்கு காலை உணவு வழங்குவதற்கு இந்நகர்மன்ற தீர்மான எண் 328 நாள்.30.06.2023 ன் படி திரு.ஜெயசங்கர், சன் கேண்டீன், திருவாரூர் என்ற நிறுவனத்தின் மூலம் உணவு வழங்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தகாலம் ஜூன் 2026 உடன் முடிவடைய உள்ளது.<br>எனவே, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண்.DMA/424/2026-M1 நாள்.02.06.2026 இல் குறிப்பிட்டுள்ளபடி ஒப்பந்த காலத்தினை மேலும் மூன்று மாதங்களுக்கு (ஜூலை, ஆகஸ்ட் மற்றும் செப்டம்பர் 2026) நீட்டிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1071/2021/இ1** | 1262.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 40**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் குடிநீர் விநியோகம் செய்யும் நீர்த்தேக்க நிலையங்களான சந்தைப்பேட்டை, மடப்புரம், தென்றல் நகர், கிடாராங்கொண்டான் மற்றும் ஐ.பி கோவிலிலிருந்து விநியோகிக்கப்படும் குடிநீரின் பாதுகாப்பு நலனை கருத்தில் கொண்டு நீர்த்த குளோரினை கொள்முதல் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1009/2025/இ1** | 1263.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 41**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 25 சந்தைப்பேட்டையில் அமைந்துள்ள ஆடுவதைக்கூடத்திற்கு புதுப்பித்து பராமரிப்பு செய்திடும் பணி மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் (ETP) அமைக்கும் பணிக்கு செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு .17.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1008/2025/இ1** | 1264.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 42**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மடப்புரம் OHT, தென்றல் நகர் OHT, சந்தைப்பேட்டை OHT, அம்மையப்பன் Sump மற்றும் நகராட்சி அலுவலகம் ஆகிய இடங்களில் உள்ள Generator பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு தயார் | 1265.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1009/2025/இ1** | |
| **பொருள் எண் : 43**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மேல்நிலை நீர்த்தேக்கத்தொட்டி மோட்டார்கள் மற்றும் சிறுமின்விசைபம்புகள் பழுதுநீக்கம் மற்றும் பராமரிப்பு பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.9.95 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று குடிநீர் நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1009/2025/இ1** | 1266.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 44**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மீன் மற்றும் இறைச்சி சந்தையில் உள்ள வணிக வளாகத்தில் தடுப்புச்சுவர் அமைத்தல் மற்றும் மின்வசதி ஏற்படுத்தும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.15.70 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1008/2025/இ1** | 1267.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 45**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு 21 நெய்விளக்குத்தோப்பில் உள்ள நியாயவிலைக்கடை பராமரிப்பு பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.1.00 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பொது நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1008/2025/இ1** | 1268.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 46**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட நெய்விளக்குத்தோப்பு மற்றும் நகராட்சி அலுவலகம் பின்புறம் உள்ள நுண்ணுயிர் உரமாக்கும் மையம் (MCC) பராமரிக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.17.10 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு :-</u>**<br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>**ந.க.எண்.1008/2025/இ1** | 1269.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 47**<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட நெய்விளக்குத்தோப்பு உள்ள பொருள் மீட்பு மையம் (MRF) & வளமீட்பு மையம் (RRC) பராமரிக்கும் பணிக்கு | 1270.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

<table>
<tr>
<td>தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.4.50 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று பொதுநிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1008/2025/இ1</td>
<td></td>
</tr>
<tr>
<td>பொருள் எண் : 48<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 13 ல் உள்ள கௌரிசாமி நகராட்சி நடுநிலைப்பள்ளியில் உள்ள Smart Class க்கு False Ceiling மற்றும் மராமத்து பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு .2.60 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று கல்வி நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1010/2025/இ1</td>
<td>1271.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண் : 49<br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட மடப்புரம் சபாபதி முதலியார் பள்ளி ஆடிடோரியம் (Auditorium) கூடுதல் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ.7.40 இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களுக்கு மதிப்பீடுகளை சமர்ப்பித்து உரிய அனுமதி பெற்று கல்வி நிதியின் கீழ் பணியினை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1008/2025/இ1</td>
<td>1272.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண் : 50<br>திருவாரூர் நகராட்சியின் 2024-2025ம் ஆண்டிற்கான வருவாய் நிதி, குடிநீர் நிதி மற்றும் கல்வி நிதிக்கான ஆண்டு கணக்குகளை தனியார் பட்டைய (Charted Accountant) கணக்கர் மூலம் முடித்ததற்காக செலவினத்தொகை ரூ.70,000/ஐ-SRINIVASA Computers, Villupuram-க்கு வழங்கிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு :-</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1343/2025/பி2</td>
<td>1273.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
<tr>
<td>பொருள் எண் : 51<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு 2026-2027-ம் நிதியாண்டிற்கு மேற்கொள்ளப்படவுள்ள செலவினங்களுக்கு கீழ்கண்ட விபரப்படி நிதி ஒதுக்கீடு செய்ய<br>மன்றத்தின் அனுமதிக்கு.
<table>
<tr><td>1.</td><td>திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடுத்தபடும் வாகனங்களுக்கு தகுதி சான்று, இன்சுரன்ஸ், சில்லரை பழுதுகள் போன்றவற்றிக்கான செலவினம்</td><td>80.00லட்சம்</td></tr>
<tr><td>2.</td><td>கொசு புழு தடுப்பு முதிர் கொசு தடுப்பு பணிகள் கொசு புழு தடுப்பு மருந்துகள், புகை தெளிப்பான் வாங்குதல், கை தெளிப்பான் வாங்குதல் மற்றும் பராமரிப்பு , பழுது நீக்கம் போன்றவை செலவினம்</td><td>30.00லட்சம்</td></tr>
<tr><td>3.</td><td>நீர்த்த சுண்ணாம்பு, ப்ளீச்சீங் பவுடர், கிருமி நாசினி, தொற்று நீக்கிமருந்துகள் வாங்கிட செலவினம்</td><td>60.00லட்சம்</td></tr>
</table></td>
<td>1274.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது</td>
</tr>
</table>

| | | | |
|---|---|---|---|
| 4. | திடக்கழிவு மேலாண்மை பணியில் ஈடுபடும் வாகனங்களுக்கு எரிபொருள் செலவினம் செய்தல். | 60.00லட்சம் | |
| 5. | பொதுசுகாதாரப் பணியாளர்களுக்கு தளவாடச்சாமான்கள், பாதுகாப்பு உபகரணங்கள், வாங்கிட செலவினம் | 50.00லட்சம் | |
| 6. | தொற்றுநோய்கள் பரவும் போது நோயினை கட்டுபடுத்த கருவிகள், மருந்துகள், விழிப்புணர்வு பணிகள், பணியாளர்களை தற்காலிமாக அமர்த்துதல், அறிக்கை தொகுப்புகள், புகைப்படம் எடுத்தல் போன்ற பணிகளுக்கு செலவினம் | 50.00லட்சம் | |
| 7. | தூய்மைப் பணியாளர்களுக்கு சீருடைகள், காலணிகள் பாதுகாப்பு மற்றும் உபகரணங்கள் செலவினம் | 10.00லட்சம் | |
| 8. | பொது சுகாதாரம் குறித்து விழிப்புணர்வு மற்றும் முகாம் நடத்துதல் சில்லரை செலவினம் | 5.00லட்சம் | |
| 9. | டெங்கு தடுப்பு பணிக்காக தற்காலிக பணியாளர்களை பணியமர்த்துதல். | 80.00லட்சம் | |
| 10. | இயற்கை இடர்பாடு காலங்களில் தேவைப்படும் அத்தியாவசிய தளவாடச்சாமன்கள், உபகரணங்கள், பணியாளர்களை தற்காலிகமாக அமர்த்துதல் வாகனங்களுக்கு எரிப்பொருள் மற்றும் வாடகை இயந்திரங்கள் போன்றவற்றிக்கான செலவினம் | 25.00லட்சம் | |
| 11. | தெரு நாய்களின் இனப்பெருக்கத்தினை கட்டுபடுத்தல் மற்றும் பிடித்து அப்புறப்படுத்தும் பணிகளுக்கு செலவினம் ABC (Animal Birth Control) | 35.00லட்சம் | |
| 12. | நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வரும் நெய்விளக்கு தோப்பு உரக்கிடங்கில் உரம் தயாரிப்பு பணிகள் மேற்க்கொள்ள செலவினம் | 20.00லட்சம் | |
| 13. | அ/மி தியாகராஜர் தேர் திருவிழா காலங்களில் பொது சுகாதார பணி மேற்கொள்ள தற்காலிக பணியாளர்கள் அமர்த்துதல், கிருமி நாசினி, பாதுகாப்பு உபகரணங்கள், தளவாட சாமன்கள் வாங்குதல், பணிகளுக்கு செலவினம். | 40.00 லட்சம் | |
| 14. | தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் விழிப்புணர்வு , விழிப்புணர்வு முகாம், நாளிதழ் விளம்பரம் மற்றும் தெருமுனை பிரச்சாரங்கள் போன்ற பணிகளுக்கு செலவினம் | 25.00 லட்சம் | |
| 15. | பொது சுகாதாரம் குறித்த நாளேடுகளில் வரி விளம்பரங்கள் செய்வதற்கு செலவினம் | 15.00 லட்சம் | |
| 16. | தற்காலிக தூய்மைப்பணியாளர்கள் அமர்த்துதல் திடக்கழிவு மேலாண்மை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் போன்றவற்றிற்கான செலவீனம். | 800.00 லட்சம் | |
| 17. | திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு பயன்படுத்தப்படும் வாகனம் வாங்குதல் செலவீனம் | 80.00 லட்சம் | |
| 18. | பிறப்பு மற்றும் இறப்பு பதிவேடுகள் பழையவை, புதியவை பைண்டிங் செலவீனம் | 5.00 லட்சம் | |
| 19. | உரக்கிடங்கு பராமரிப்பு செலவினம் | 20.00 லட்சம் | |
| 20. | கால்நடைகள் மற்றும் பன்றிகளை பிடித்து அப்புறப்படுத்திட செலவீனம் | 20.00 லட்சம் | |
| 21. | பொது சுகாதாரப்பிரிவு பணியாளர்களுக்கு ஊதியம், பண்டிகை முன்பணம், ஈட்டிய விடுப்பு ஊதியம் ஒப்படைப்பு, வழங்குவதற்கான செலவீனம் | 800.00 லட்சம் | |
| 22. | கொரோனா மற்றும் நோய்கள் தொற்று தடுப்பு நடிவடிக்கை போன்ற பணிகளுக்கு செலவினம் | 20.00லட்சம் | |
| 23. | புத்தக திருவிழா மற்றும் அரசு விழாக்கள் நடைபெற அத்தியாவசிய செலவினம் | 5.00 லட்சம் | |
| 24 | நகராட்சி உதவி பெறும் பள்ளிகளில் தற்காலிக தூய்மைப்பணியாளர்கள் அமர்த்துதல் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்துதல் போன்றவற்றிற்கான செலவீனம். | 20.00 லட்சம் | |
| அலுவலகக்குறிப்பு<br>1.அனுமதி வழங்கலாம்<br>2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண்.1212/2026/எச்1 | | | |

| | |
|---|---|
| **பொருள் எண் : 52**<br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN.50.F.6520 (JEEP) –ன் பேட்டரி பழுதடைந்து செயல்பட முடியாத நிலையில் உள்ளதால், பழைய பேட்டரி கொடுத்து புதியதாக EXIDE EEZY 70 RMF பேட்டரி ஒன்று விலைப்புள்ளி கோரி வாங்கிடவும், அதற்குண்டான செலவினத் தொகை ரூ.7400/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு.<br>மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண்.1210/2026/எச்1 | 1275.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 53**<br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரம் தூய்மை இந்தியா திட்டம் – நகரங்களில் தூய்மைக்கான மக்கள் இயக்கத்தின் கீழ் செயல்பாடுகள் குறித்து 2024 மற்றும் 2025 ஆண்டுக்கான செலவினங்களாக நீர்நிலைகளின் கரைப்பகுதிகளில் பெருமளவில் மரம் நடுதல், தன்னார்வலர்கள் மற்றும் மக்கள் பிரதிநிதிகள் கொண்டு நீர்நிலைகளின் கரைப்பகுதி சுத்தம் செய்தல், மரக்கன்று நடுவதற்கு இயந்திரம் மூலம் குழிபோடுதல், தேநீர், தண்ணீர் பாட்டில், ஸ்நாக்ஸ் வழங்குதல், விளம்பர பலகை பிளக்ஸ் 6x4, 10x10 அமைத்தல், இடுகாடு மற்றும் மக்கள் கூடும் இடங்களில் சுத்தம் செய்தல், சிறிய குப்பை தொட்டி அமைத்தல், இரும்பு கூண்டு அமைத்தல், பொதுமக்களுக்கு பொன்னாடை வழங்குதல் மற்றும் நற்சான்றிதழ் வழங்குதல், விளம்பரம் சுவர் வர்ணம் பூசுதல் பழைய புதிய பேருந்து நிலையம் மற்றும் தெற்கு வீதிகளில் 19.04.2024 (உலக கழிப்பறை தினம்) பொது மற்றும் சமுதாய கழிப்பிடங்கள் சுத்தம் செய்தல் Q R code பிரபலப்படுத்துதல், 11.012025 அன்று மழைநீர் வடிகால்களில் சுத்தம் செய்தல் உரக்கிடங்கில் கம்பிவேலி அமைத்து மரக்கன்று நடுதல், 22.03.2025 அன்று தண்ணீர் தினத்தினை முன்னிட்டு சாலையின் மையப்பகுதி மற்றும் அரசு அலவலகங்களில் மரக்கன்று நடுதல், பராமரிப்பு போன்றவைகளை தூய்மை இந்தியா திட்டம் செயல்படுத்திட செலவினத்தொகை பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.தணிகாசலம் என்பவர் மூலம் மேற்கொள்ளப்பட்டது, அதற்குண்டான செலவினம் ரூ.3,00,000./ ரூபாய் மூன்று இலட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>1. அனுமதி வழங்கலாம்<br>2. நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பணிகள் மேற்கொண்டதையும், தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் திரு.எஸ்.தணிகாசலம் என்பவருக்கு தொகை வழங்கலாம்.<br>ந.க.எண்.1213/2026/எச்1 | 1276.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 54**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் ஜனவரி 2026 மாத காணொளிக்கூட்ட அறிவுரைகளின்படி, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் தூய்மைப் பணியாளர்களுக்கான காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ், திருவாரூர் நகராட்சியில் பணிபுரியும் மொத்தம் 267 தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்ட துவக்கவிழா 09.02.2026 –ல் சிறப்பாக நடைபெற்றது. மேற்படி விழாவிற்கான செலவினங்கள் சன் கேண்டின் உரிமையாளர் திரு.எஸ்.ஜெயசங்கர் அவர்கள் மூலம் மேற்கொள்ளப்பட்டது. எனவே அதற்குண்டான செலவினத் தொகை ரூ.1,60,800/–ஐ வழங்கியதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்<br>ந.க.எண். 1071/2023/எச்1 | 1277.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| **பொருள் எண் : 55**<br><br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் 10.01.2023 ம் தேதிய செயல்முறை ஆணை ந.க.எண். 35295/2022/EA2 – SWM –9 உத்தரவில், திருவாரூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் கீழ் வீடுகள் மற்றும் வணிக நிறுவனங்களில் சேகரமாகும் குப்பைகளை தேவையான பணியாளர்கள், தளவாடச்சாமான்கள் மற்றும் வாகனங்கள் பயன்படுத்தி மக்கும் குப்பை, மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து வாங்கி இதனை இந்நகராட்சியால் குறிப்பிடப்படும் உரமாக்கும் மையம் (MCC) மறு சுழற்சி மையம் (RRC) மற்றும் கழிவு வளம் மீட்பு மையம் (MRF) ஆகிய இடங்களுக்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ.4562.55 என நிர்ணயம் செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி அனுமதியின் படி மூன்றாண்டுகளுக்கு ஒப்பந்தப்புள்ளி கோரி நிறுவனத்தை தேர்வு செய்து பணிகள் மேற்கொள்ளவும் உத்தரவிடப்பட்டுள்ளதை தொடர்ந்து **M/s சரம் என்விரோ சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் சென்னை என்ற நிறுவனத்திற்கு 01.06.2023 முதல் 31.05.2024 வரை ஒரு ஆண்டு காலத்திற்கு பணிகள் மேற்கொள்ள உத்தரவிடப்பட்டது.**<br><br>மேற்கண்ட உத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளபடி, ஒப்பந்தப்பணி ஓராண்டு காலத்திற்கு மட்டும் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்பட்டுள்ளது, ஒப்பந்த காலம் 31.05.2024–ந் தேதியோடு முடிவடைந்ததால் நகர்மன்ற தீர்மானம் எண்.737, நாள்.27.11.2024–ன் படி 01.06.2024 முதல் 31.05.2025 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்தும், ஏல ஆவணங்களின்படி 10% ஊதியம் உயர்த்தி வழங்கி ஓராண்டிற்கு பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கப்பட்டுள்ளது. பணி நீட்டிப்பு செய்த 01.06.2024 முதல் 31.05.2025 வரை ஓராண்டு காலம் முடிவடைந்தால், பொது சுகாதாரப்பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி பணிக்காலத்தினை நகர்மன்ற தலைவர் 16.05.2025–ந் தேதிய முன் அனுமதி பெற்று 01.06.2025 முதல் 31.08.2025 வரை மூன்று மாத காலத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.1004, நாள்.07.08.2025 –ன்படி, பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்து, பணி உத்தரவு வழங்கப்பட்டது, மேலும் 01.06.2025 முதல் 31.08.2025 வரை மூன்று மாத பணி காலத்தினை உள்ளடக்கி 01.06.2025 முதல் 31.05.2026 வரை ஓராண்டு காலத்திற்கு நீட்டிப்பு செய்தும், ஒப்பந்த ஆவணங்களின்படி அடிப்படை தொகையில் 20% உயர்த்தி வழங்கிட நகர்மன்ற தீர்மான எண்.1005, நாள்.07.08.2025–ன்படி, அனுமதிக்கப்பட்டுள்ளது.<br><br>மேற்படி பணிக்காலம் 31.05.2026 உடன் முடிடைவதால், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில், (efile.No. DMA/1196/2026–SBM–2 தேதி: 15–03–2026) தற்போதுள்ள ஒப்பந்தங்கள் ஏப்ரல் மற்றும் ஜூன் 2026–க்கு இடையில் முடிவடையும் நிலையில் உள்ளதாலும் 2026 தமிழக சட்டமன்றத் தேர்தல்கள் மற்றும் நடத்தை விதிமுறைகள் (Code of Conduct) அமல்படுத்தப்பட்டதன் காரணமாக, ஜூன் 2026 ஒரு மாதம் நீட்டிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேலும் தற்போது நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடிதத்தில், (efile.No.DMA/1196/2026–SBM–2<br>தேதி: 02–06–2026) ஜீலை மற்றும் ஆகஸ்ட் 2026 ஆகிய 2 மாதங்களுக்கு நீட்டிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே நீட்டிக்கப்பட்டுள்ள ஜூன் 2026 மாதம் முதல் ஆகஸ்ட் 2026 வரை 3 மாதங்களுக்கு பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்தும், ஏற்கனவே மேற்கொண்டு வரும் ஊதிய அடிப்படையிலேயே பணிகள் மேற்கொள்ள பணி உத்தரவு வழங்கிடவும், அதற்குண்டான உத்தேச கூடுதல் செலவினம் ரூ.90.00 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.2592/2022/எச்1 | 1278.<br>அலுவலககுறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| **பொருள் எண் : 56**<br><br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் வளம் மீட்பு மையத்தில் (RRC) தேங்கியுள்ள மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத மற்றும் விற்க இயலாத கழிவுகளை அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு வெளிக்கொணர்வு முறையில் ஒப்பந்த அடிப்படையில் வாகனம் மூலம் நாளொன்றுக்கு 4 மெட்ரிக் டன் கழிவுகள் மக்காத மறுசுழற்சி செய்ய இயலாத விற்பனையாகாத கழிவுகளாக சேகரமாகிறது. இவற்றை திருச்சி மாவட்டத்திலுள்ள அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பிட நகராட்சி மூலம் (Memorandam of Undertaking) செய்யப்பட்டுள்ளது. மேலும் தற்போது கனரக வாகனங்கள் அனைத்தும் தனியார் ஒப்பந்த நிறுவனத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாலும், வளம் மீட்பு மையத்தில் (RRC) மையத்தில் தேங்கியுள்ளதாலும், அவற்றை பொதுசுகாதார நலன் கருதியும் இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும், ஒப்பந்த அடிப்படையில் ஸ்ரீ முருகன் லாரி சர்வீஸ், தஞ்சை சாலை, திருவாரூர் தனியார் நிறுவனத்தின் கனரக வாகனம் மூலம் அரியலூர் சிமெண்ட் தொழிற்சாலைக்கு கொண்டு செல்வதற்கு நகர்மன்ற தீர்மான எண்.781, நாள். 30.01.2025–ன்படி, 01.01.2025 முதல் 31.03.2025 வரை 3 மாதங்கள் கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் முடிவடைந்த நிலையில், மீண்டும் நகர்மன்ற தீர்மான எண்.1002, நாள். 07.08.2025–ன்படி 01.04.2025 முதல் 30.09.2025 வரை 6 மாதங்கள் கால நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் முடிவடைந்த நிலையில், நகர் மன்ற தீர்மான எண்.1103, நாள். 30.01.2026–ன்படி 01.10.2025 முதல் 31.12.2025 வரை 3 மாதங்கள் கால நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளப்பட்ட வந்த நிலையில் மேற்படி பணிக்காலம் 31.12.2025–ந்தேதியோடு முடிவடைவடைந்ததால், பொதுசுகாதார நலன் கருதி நகர் மன்ற தீர்மான எண்.1129, நாள்.30.01.2026–ன்படி, 01.01.2026 முதல் 30.06.2026 வரை 6 மாதங்கள் நீட்டிப்பு செய்யப்பட்ட பணிக்காலம் 30.06.2026–ந் தேதியோடு முடிவடைவதால், பொதுசுகாதார நலன் கருதியும், இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும், 01.07.2026 முதல் 31.12.2026 வரை 6 மாதங்களுக்கு காலநீட்டிப்பு செய்தும், இப்பணியினை ஏற்கனவே மேற்கொண்டு வரும் ஸ்ரீ முருகன் லாரி சர்வீஸ் திருவாரூர் நிறுவனத்திற்கு அதே செலவின அடிப்படையில் மேற்கொள்ளவும், அதற்குண்டான உத்தேச செலவினத் தொகை ரூ.30,00000/– (முப்பது இலட்சம்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br><br>**அலுவலகக்குறிப்பு.**<br><br>1) பொதுசுகாதார நலன் கருதியும் இப்பணியின் அவசர அத்தியாவசியம் கருதியும் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ மு கன் லாரி சர்வீஸ் திருவாரூர், நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்கிடவும் மற்றும் தொகை வழங்கிடவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) 01.07.2026 முதல் 31.12.2026 வரை 6 மாதங்கள் இப்பணியினை காலநீட்டிப்பு செய்தும், அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.30,00,000/– (முப்பது இலட்சம்) பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண்.465/2024/எச்1 | 1279.<br>அலுவலகுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 57**<br><br>திருவாரூர் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண் TN.50.F.6520 (JEEP) –ன் பேட்டரி பழுதடைந்து நிலையில் உள்ளதால், பழைய பேட்டரி கொடுத்து புதியதாக EXIDE eezy 70 RMF பேட்டரி ஒன்று விநியோகம் செய்திட ஏதுவாக உள்ளூர் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரப்பட்டதில், கீழ்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது. | 1280.<br>அலுவலகுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

விவரம் கீழ்வருமாறு.

| HITEK POWER CONTROLS, THIRUVARUR | BUVANESHWARI POWER BATTERY, THIRUVARUR | DAY NIGHT MARKETING THIRUVAUR |
|---|---|---|
| Rs.7600/- | Rs.7500/- | Rs.7400/- |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள DAY NIGHT MARKETING THIRUVAUR நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும், அதற்குண்டான செலவினத்தொகை ரூ.7400/- அனுமதித்து மன்றப்பொருள் பார்வைக்கும் பதிவிற்கும்

அலுவலக குறிப்பு : -

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.
2. பொதுசுகாதார பணியின் நலன் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி DAY NIGHT MARKETING THIRUVAUR திருவாரூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியினை ஏற்று பணி உத்தரவு வழங்கியதையும், அதற்குண்டான செலவினம் ரூ.7400/- வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண் : 1210/2025/எச்1

**பொருள் எண் : 58**

1281.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவிற்கு பயன்படுத்தப்பட்டு வரும் வாகனம் எண். TN.50.K.9248 (Auto) பழுதுகள் சரி செய்து தகுதி சான்று பெறுவதற்கு பொதுசுகாதார பணிகளின் அவசர அவசியம் கருதி உள்ளூர் ஆட்டோ கேரேஜ் நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளி கோரி பணிகள் மேற்கொள்ளவும், அதற்கண்டான உத்தேச செலவினம் ரூ.70,000/- க்கு (ரூபாய் எழுபதாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலக குறிப்பு : -

மன்றம் அனுமதி வழங்கலாம்.

ந.க.எண். 1676 /2026/எச்1

**பொருள் எண் : 59**

1282.
அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் உள்ள பிரிண்ட் எடுக்கும் இயந்திரம் சிறயதாக உள்ளதால், இப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மைப்பணிகள், போன்ற பொதுசுகாதார அவசர அறிக்கைகள் உடனடியாக கோரப்படுவதால் தற்போது உள்ள இயந்திரத்தில் தொடர்ந்து 5 பக்கங்களுக்கு மேல் பிரிண்ட் அல்லது நகல் எடுத்தால் பேப்பர் பிரிண்டரில் சிக்கிகொள்கிறது. அதனால் பொதுசுகாதார அவசர அறிக்கைகள் உடனுக்குடன் பிரிண்ட் எடுக்க முடியாமல், பொதுசுகாதார பணிகளில் தொய்வு ஏற்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மேலும் இப்பிரிவில் தூய்மை இந்தியா திட்டப்பணிகள், திடக்கழிவு மேலாண்மைப்பணிகளின் கீழ் தினசரி அறிக்கைகள், வாரந்திர அறிக்கைகள் மற்றும் மாதாந்திர அறிக்கைகள் மற்றும் பொதுசுகாதாரப்பிரிவு பணியாளர்களுக்கு ஊதியம் வழங்குதல் போன்ற பணிகள் மேற்கொள்வதால் அதிகப்படியான பக்கங்கள் பிரிண்ட் எடுக்க முடியாத காரணத்தினால் அலுவலக மின்னஞ்சல் முகவரி அல்லது வாட்ஸ் அப்பில் அனுப்பி கணினி அறையில் பிரிண்ட் எடுக்கப்பட்டு வருகிறது, எனவே பொது சுகாதாரப்பணிகளின் அவசர அவசியம் கருதி பெரிய அளவிலான பிரிண்டர் ஒன்று விலைப்புள்ளி கோரி வாங்கிக்கொள்ளவும் அதற்குண்டான உத்தேச செலவினம் ரூ.1.00 (ஒரு இலட்சத்திற்கு) அனுமதி வழங்கிடக்கோரி மன்றப்பொருள் ஆணையர்

| | |
|---|---|
| ஆணையர் அவர்களின் ஒப்புதலுக்கு<br>அலுவலக குறிப்பு : –<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் . /2026/எச்1 | |
| **பொருள் எண் : 60**<br><br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்.739/2023/அ3, நாள்.05.03.2025–ன்படி, மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் திருவாரூர் மாவட்டம் திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பல்வேறு அரசு நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்ளும் பொருட்டு 06.03.2026 வருகை புரிந்ததை தொடர்ந்து திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் பொதுசுகாதாரம் மற்றும் அடிப்படை வசதிகள் தொடர்பான பணிகள் மேற்கொள்வதற்காக மேற்கண்ட உத்தரவின் அடிப்படையில் வரப்பெற்ற மாற்று நகராட்சி பணியாளர்களுக்கு 06.03.2026 மற்றும் 07.03.2026 ஆகிய இரண்டு நாட்களுக்கு சன் கேண்டீன் நிறுவனத்தின் மூலம் மேற்படி பணியாளர்களுக்கு 3 வேளைகளுக்கான உணவு வழங்கியதையும் மற்றும் செலவின பட்டியல் தொகை ரூ.17230/– ஐ வழங்கியதையும் மன்றப்பொருள் பார்வைக்கும் பதிவிற்கும்.<br><br>அலுவலக குறிப்பு : –<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று உணவு வழங்கியதையும் அதற்குண்டான செலவின பட்டியல் தொகை ரூ.17230/–ஐ வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் . 53/2026/எச்1 | 1283.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 61**<br><br>திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் 30 வார்டுகளிலும் திறந்த வெளி கழிப்பிடம் இல்லாத நகராட்சியாக (ODF++) சுய உறுதி மொழி சான்றிதழுக்காக (SELF DECLARATION) அறிவித்தல் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்ததையும் மற்றும் திருவாரூர் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகளின் அடிப்படையில் மத்திய அரசின் வீட்டு வசதி மற்றும் நகர்புற மேம்பாட்டு (MOHUA) துறையின் மூலம் ஒவ்வொரு உள்ளாட்சி அமைப்புகளுக்கும் நட்சத்திர அங்கீகாரம் Star Rating வழங்கி வருகின்றனர். அதன்படி திருவாரூர் நகராட்சியில் சேகரமாகும் திடக்கழிவுகளை திடக்கழிவு மேலாண்மை விதிகளின்படி, தரம் பிரித்து தரம் பிரித்து சேகரிப்பது முதல் இறுதியாக்கம் வரையிலான பணிகளை சிறப்பான முறையில் கையாளப்பட்டு வருகிறது. மேலும் இரண்டாம் நிலை சேகரிப்பு (Secondary Storage Transporation) முற்றிலும் தவிர்க்கப்பட்டுள்ளது. எனவே திருவாரூர் நகராட்சியினை குப்பையில்லா நகராட்சியாக (Garbage Free city) மூன்று நட்சத்திர அங்கீகாரம் (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்காக (SELF DECLARATION) பெறுவதற்கு பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை ரூ.26,183/–மேற்கொண்டதை (தினத்தந்தி, தினமணி, TRINITY MIRROR) மன்றம் பார்வைக்கும் பதிவிற்கும்<br><br>அலுவலக குறிப்பு : –<br><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி (ODF++) (SELF DECLARATION) | 1284.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| மற்றும் (Garbage Free city) (Three Star Rating) பெற சுய உறுதி மொழி சான்றிதழுக்காக (SELF DECLARATION) பொதுமக்களின் ஆட்சேபனை கோரி தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்ததையும் அதற்கான செலவினத்தொகை ரூ.26,183/- (தினத்தந்தி, தினமணி, TRINITY MIRROR) வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.<br><br>ந.க.எண் : 53/2025/எச்1 | |
| **பொருள் எண் : 62**<br><br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 5 திருமதி. சுமதி, க/பெ. சந்தோஷ்குமார், 30/54A, நரசப்பன் தோப்பு, துர்க்காலயா ரோடு, திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 02.05.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண்-5 ஒப்படைப்பு செய்யப்பட்டது .வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1137/2026/அ5 | 1285.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 63**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் B பிளாக் கடை எண் 38 திரு. M. அப்துல்ரஹ்மான், 33/2, தாஜ் பிராக்க்ஷா தெரு, கொடிக்கால்பாளையம், திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 15.06.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் B பிளாக் கடை எண்-38 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 758/2026/அ5 | 1286.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| **பொருள் எண் : 64**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 20 திரு. K.கீதா, க/பெ. குமரவேல், 29/6, தஞ்சை சாலை, திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 10.06.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>**அலுவலக குறிப்பு.**</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 20 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1435/2026/அ5 | 1287.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 65**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 23 திரு. வீ. பத்மநாதன், 44B, பாரதியார் வீதி, தென்றல் நகர், திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 21.05.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>**அலுவலக குறிப்பு.**</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 23 ஒப்படைப்பு செய்யப்பட்டது .வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1435/2026/அ5 | 1288.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 66**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 24 திரு. வீ. பத்மநாதன், 44B, பாரதியார் வீதி, தென்றல் நகர், திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 21.05.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு. | 1289.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| <u>அலுவலக குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 24 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 1435/2026/அ5 | |
| **பொருள் எண் : 67**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் C பிளாக் கடை எண் 27 திரு. S. ரவிசந்திரன், 13, ஆறுமுகம் நகர், சீனிவாசபுரம், திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 10.03.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலக குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் C பிளாக் கடை எண் 27 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 758/2026/அ5 | 1290.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 68**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் C பிளாக் கடை எண் 09 திரு. ஜி. அய்யப்பன், 5/76B, மேலத்தெரு, கடுவன்குடி, திருநெய்பேர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 10.05.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br><u>அலுவலக குறிப்பு.</u><br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் C பிளாக் கடை எண் 09 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 758/2026/அ5 | 1291.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 69**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 04 திரு. ஜி.ஆனந்த், 6, மெயின் ரோடு, பொம்மநத்தம், நீலக்குடி என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய | 1292.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 10.06.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 04 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 758/2026/அ5 | |
| **பொருள் எண் : 70**<br>திருவாரூர் நகராட்சி தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண். 19 திரு. கு. கீதா, க/பெ. குமரவேல், 29/6, தஞ்சை சாலை, திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது. பொது மக்கள் எளிதில் உள்ளே வருவதற்கு ஏதுவாக இல்லாமல் கடை உள்ளடங்கிய நிலையில் இருப்பதால், பொதுமக்கள் வருகை இல்லாமலும், தொடர்ந்து வியாபாரம் இல்லாமலும் உள்ளதால் வாடகை தொகையினை செலுத்த இயலாமல் கடையை ஒப்படைப்பதாகவும், கடைக்கு செலுத்த வேண்டிய வாடகை நிலுவைத்தொகையினை தான் செலுத்திய வைப்புத்தொகையில் பிடித்தம் செய்துக்கொண்டு மீதமுள்ள தொகையினை வழங்கிடவும், 10.06.2026 கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தஞ்சை சாலை பழங்கள் மற்றும் காய்கறி அங்காடி வணிக வளாகம் D பிளாக் கடை எண் 19 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 758/2026/அ5 | 1293.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 71**<br>திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையம் கட்டப்பட்டு மொத்தம் 59 கடைகள், 2 உணவகங்கள், 2019–ல் பொதுஏலம் ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டது. அவற்றில் ஒரு கடைக்கு முன்வைப்பு தொகை ரூ.300000/– கூடுதல் முன் வைப்புத்தொகை ரூ.300000/– ஆக மொத்தம் ரூ.600000/–செலுத்திய பின்னர் தான் பொது ஏலம் ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொள்ள வேண்டும் என்ற நடைமுறையில் இருந்து வந்தது. அவ்வாறு ஏலம் விடப்பட்டதில் ஏலத்தொகை அதிக அளவில் கேள்விகள் கேட்கப்பட்டு ஏலம் எடுத்தவர்கள் கடையை நடத்தாமல் விட்டு விட்டு சென்றுவிட்டனர். வாடகை தொகையும் நிலுவைகள் உள்ளது.<br>வாடகை மற்றும் முன்வைப்புத்தொகை அதிகமாக உள்ளதால் எவரும் ஏலத்தில் கலந்து கொள்ள முன்வரவில்லை. எனவே, முன்வைப்புத்தொகை மற்றும் கூடுதல் வைப்புத்தொகை ரூ.600000/–உள்ளதை நிர்ணயம் செய்து ஏலம் விடுவதால் கடைகள் ஏலம் போகாமல் நகராட்சிக்கு இழப்புகள் ஏற்பட்டு வருகிறது. எனவே, முன்வைப்புத்தொகையினை ரூ.200000/– அல்லது ரூ.300000/– என நிர்ணயம் செய்து பொது ஏலம் கோரினால் கடைகள் ஏலம் போக வாய்ப்புகள் உள்ளதாக தெரியவருகிறது. மாத வாடகையினால் வருவாய் | 1294.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, முன்வைப்புத்தொகையினை குறைத்து ஏலம் கோரிடும் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. தொடர் ஏலம் கோரப்பட்டு வரும் நிலையில் ஏலம் கோரிட எவரும் முன்வராததால் நகராட்சி வருவாய் இழப்பை குறைக்கும் பொருட்டு முன்வைப்புத்தொகை ரூ.300000/- என குறைத்து மறு ஒப்பந்தபுள்ளிகள் கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண் 2506/2017/அ5 | |
| **பொருள் எண் : 72**<br>திருவாரூர் நகராட்சிக்கு சொந்தமான தியாகபெருமாநல்லூர் புதிய பேரூந்து நிலையத்தில் உள்ள கடைகள், பழைய தஞ்சை சாலையில் உள்ள காய்கறி மற்றும் பழங்கள் வணிக வளாகம் கடைகள், முத்தமிழறிஞர் கலைஞர் நகர பேரூந்து நிலையம் முதல் தளத்தில் உள்ள கடைகள், தஞ்சை சாலையில் புதியதாக கட்டப்பட்டுள்ள வணிக வளாக முதல்தள கடைகள், மீன் மற்றும் இறைச்சி சந்தை குத்தகை இனங்களுக்கு மின்னணு ஏலம் (E-Auction) / பொதுஏலம்/ ஒப்பந்தப்புள்ளி கோரவும், பழைய தஞ்சை சாலையில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023-2024-கீழ் கட்டப்பட்டுவரும் கடைகளுக்கு முன் ஏலம்/ முன் ஒப்பந்தப்புள்ளி கோரவும் பொதுமக்கள் அறியும் வண்ணம் விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கும், அதற்கான விளம்பர கட்டணம் மற்றும் இதர செலவுகளுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/-க்கு (ரூபாய் இரண்டு இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு.</u>**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>ந.க.எண் 2506/2017/அ5 | 1295.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 73**<br>திருவாரூர் மாவட்டம் , திருமஞ்சன வீதி வார்டு எண்-2, பிளாக் எண் 38, நகரளவு எண் 2008, 2009 ஆகிய எண்களின் கட்டிட வரைபட அனுமதி கோரி Service Request No.104/CP/25-26/0000855 என்ற எண்ணில் ரூ.8,20,315/- பணம் செலுத்தப்பட்டது. ஆனால் தவறான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட்ட காரணத்தினால் கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டது. மீண்டும் Service Request No.104/CP/25-26/0001420 என்ற எண்ணில் ரூ.8,27,903/- பணம் செலுத்தப்பட்டு நகராட்சி ஆணையரால் கட்டிட அனுமதி வழங்கப்பட்டது. எனவே கட்டிட அனுமதி ரத்து செய்யப்பட்டதற்கு செலுத்தப்பட்ட தொகையில் பாதாள சாக்கடை வைப்புத்தொகை ரூ. 20000/- பிடித்தது போக மீதம் ரூ. 800315/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்.1888 /2026/எப்1 | 1296.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 74**<br>தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள், 2019 மற்றும் அதில் உள்ள ஒழுங்குமுறைகளின்படி கட்டாயமாக்கப்பட்டுள்ள சட்டபூர்வ விதிகள் மற்றும் ஒழுங்குமுறைகளின் தேவைகளை கண்டிப்பாக பின்பற்றாமல் ஸ்கொயர் சினிமாஸ் மற்றும் மல்டிபிளக்ஸ் சினிமா தியேட்டருக்கான உரிமத்தை வாங்குவது குறித்து WP. NO 5375 of 2026 மனு தாக்கல் செய்யப்பட்டு 20.02.2026 அன்று விசாரணைக்கு வரப்பெற்றது. எனவே மேற்கண்ட வழக்கிற்கு ஆஜரான திரு.எஸ்.ஜெ.முகமது சாதிக் முன்னாள் அரசு | 1297.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| வழக்கறிஞர் சென்னை அவர்கள் வழக்கு கட்டணமாக ரூ.15000/- வழங்க கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண்1315 /2026/எப்1 | |
| **பொருள் எண் : 75**<br>வார்டு 1, பிளாக்எண் 23, பகுதியில் அடங்கியுள்ள மனுதாரரின் 1060 சதுர அடி நிலத்திற்கான சொத்துவரி ரூ. 12642/- லிருந்து 25894/- ஆக அளவுக்கு அதிகமாக உயர்த்தப்பட்டது தொடர்பாக WP No.8894 of 2026 மனு தாக்கல் செய்யப்பட்டு 09.03.2026 அன்று விசாரணைக்கு வரப்பெற்றது. எனவே மேற்படி வழக்கிற்கு ஆஜரான திரு.எஸ்.ஜெ.முகமது சாதிக், முன்னாள் அரசு வழக்கறிஞர் சென்னை அவர்கள் வழக்கு கட்டணமாக ரூ.15000/- வழங்க கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் கட்டணம் ரூ.15000/- வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு :<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 1416 /2023/எப்1 | 1298.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 76**<br>திருவாரூர் நகராட்சி தியாகப்பெருமாநல்லூர் புதிய பேருந்து நிலையம் கடை எண் 11 செல்வீஸ் ஹோட்டல் திருவாரூர் என்பவரால் ஏலம் எடுத்து நடத்தப்பட்டு வந்தது தொடர்ந்து கடையை நடத்த முடியாத காரணத்தால் வாடகை தொகையினை நடப்பு மாதம் வரை முழுவதும் செலுத்தி கடையை ஒப்படைப்பு செய்து 10.07.2026 அன்று கடிதம் கொடுத்துள்ளார். கடிதத்தினை ஏற்று மேற்படி கடையினை நகராட்சி வசம் எடுத்து மறுஒப்பந்தப்புள்ளி கோரிட மன்றத்தின் அனுமதிக்கு.<br>அலுவலக குறிப்பு :<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. திருவாரூர் நகராட்சி தியாகபெருமாநல்லூர் புதிய பேருந்து நிலைய கடை எண் 11 ஒப்படைப்பு செய்யப்பட்டது. வருவாய் இழப்பை தவிர்க்கும் பொருட்டு மறுஒப்பந்தப்புள்ளி கோருவதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 2506/2017/அ5 | 1299.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 77**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் அவர்களின் கடிதம் ந.க.எண்.1046/2025/இ3, நாள்.16.06.2026ம் தேதிய கடிதத்தின்படி, திருவாரூர் நகராட்சியில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு பயன்பாட்டு பணிகள் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்திட முனைவர் திருநங்கை வி.என்.ராணி, இயக்குநர், சிவசக்தி கிராமிய கலைக்குழு மூலம் திருவாரூர் நகராட்சியில் 09.07.2026ம் தேதியில் பொதுமக்களுக்கு நிலுவையில் உள்ள வரி தொகையை செலுத்துதல், திடக்கழிவு மேலாண்மை பணிகளான எனது குப்பை, எனது பொறுப்பு, மக்காத குப்பை பிரித்து அளித்தல், பிளாஸ்டிக் ஒழிப்பு, மீண்டும் மஞ்சப்பை, டெங்கு ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு, குடிநீர் சிக்கனம், மழைக்காலங்களில் குழந்தைகளின் உடல் நிலை பாதுகாப்பு, திறந்தவெளி மலம் ஜலம் கழிப்பு ஒழிப்பு, தனி நபர் கழிவறை அவசியம் மற்றும் பொது சுகாதாரம் போன்ற விழிப்புணர்வுகளை பள்ளிகள் மற்றும் பொதுமக்கள் மத்தியில் கலை நிகழ்ச்சிகள் மூலம் நடத்திடவும் தெரிவிக்கப்பட்டுள்ளதை தொடர்ந்து திருவாரூர் நகர்பகுதியில் 4 இடங்களில் விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்திட நிகழ்ச்சி ஒன்றுக்கு ரூ.5000/-வீதம் 4 நிகழ்ச்கிக்கு ரூ.20,000/- மேற்படி நாடக குழுவிற்கு வழங்கிட மன்றத்தின் வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பி.. | 1300.<br>அலுவலககுறிப்பு அனுமதிக்கப்பட்டது |

| | |
|---|---|
| 1. அனுமதி வழங்கலாம்.<br>2. செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளலாம்.<br>ந.க.எண். 53 /202/எச்1. | |
| **பொருள் எண் : 78**<br>திருவாரூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பிறப்பு / இறப்பு பதிவேடுகள் 1922 முதல் பராமரிக்கப்பட்டு வருகிறது. அவ்வாறு பராமரிக்கப்பட்டுவரும் பதிவேடுகளில் பக்கங்கள் தனித்தனியாகவும் , கிழிந்தும் உள்ளது. எனவே உள்ளூர் மற்றும் வெளியூர் பைண்டிங் தொழில் செய்வோரிடம் விலைப்புள்ளி பெற்று பதிவேடுகளை தரமான முறையில் பைண்டிங் செய்யவும், அப்பணிகளை திருவாரூர் நகராட்சி அலுவலக பொது சுகாதார பிரிவு வளாகத்திற்குள்ளேயே மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவின தொகை ரூ.1,25,000/-க்கும் (ஒரு இலட்சத்து இருபத்து ஐந்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு..<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>ந.க.எண். 53/2026/எச்1 | 1301.<br>அலுவலககுறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |
| **பொருள் எண் : 79**<br>திருவாரூர் நகராட்சியில் விலங்கு பிறப்பு கட்டுப்பாடு விதிகள், 2023-ன் படியும், நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் கடித ந.க.எண். 20383/2022-H1-2 நாள்:20.06.2026-ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி திருவாரூர் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித்திரியும் சமூக நாய்களை பிடித்து கருத்தடை அறுவை சிகிச்சை செய்து, பிடிக்கப்பட்ட நாய்களை பிடிக்கப்பட்ட, இடத்திலேயே சேர்ப்பிக்க வேண்டும் எனவும், நகராட்சி பகுதிகளில் சுற்றித்திரியும் சமூக நாய்களை ஒப்பந்த முறையில் வாகனங்களில் பிடித்தல், கருத்தடை அறுவை சிகிச்சை செய்தல் மருந்துகள், நாய்களுக்கான உணவு, மற்றும் பராமரிப்புகள் ஆகியவற்றுக்கு நாய் ஒன்றுக்கு ரூ.1650/- வழங்கலாம் எனவும், மேலும் சமூக நாய்களுக்கு பிடிக்கப்படும் இடத்திலேயே வெறிநோய் தடுப்பூசி (ARV) செலுத்துதலுக்கான பணிகள் மேற்கொள்ள வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே இப்பணிகளை பொதுநிதியில் மேற்கொள்ளவும் உத்தேச செலவினம் ரூ.35.00 லட்சத்திற்கும் (முப்பத்து ஐந்து இலட்சம் மட்டும்) மன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.<br>**அலுவலகக்குறிப்பு**<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. செலவினம் மேற்கொண்ட பிறகு 50% சதவீதத்தை விலங்குகள் நல வாரியத்திலிருந்து திரும்பப் பெறவும் (Reimbursement) கருத்து அனுப்பலாம்<br>**ந.க.எண். 2409 /2024 /எச்1** | 1302.<br>அலுவலககுறிப்பு<br>அனுமதிக்கப்பட்டது |

நாள் : .07.2026
இடம் : திருவாரூர்

(ஒம்) செ. புவனப்பிரியா,
நகர்மன்ற தலைவர்
திருவாரூர் நகராட்சி